980

والصلح خير

9 - MAR 1921
MADRAS.

982/12

ஷமாதானமே ஜெய

M. S. M. முஹம்மது

முயற்சியினா லுற்பவித்த

நூல்

ஹிஜ்ரி 1339 முஹர்ரம்

சென்னை:
ஜூபிடர் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது
1920

விலை அணா 4

Q7:.417.
N20
149423

பஞ்சஷா ஹுஸைனி.

والصلح خير

OF THE REGISTRAR OF BOOKS
9 MAR 1921
MADRAS
980
1.21

நேரிசை வெண்பா.

கெஞ்சுபவ்வின் கோனுகி ஹாசீங் குலப்புலியை
வஞ்சித்த காலம் வரங்காண—மிஞ்சியவன்
பொற்காத்தால் நற்புதினம் பூபாலன் கண்டறிந்து
நிற்பித்த தின்னருளே காப்பு.

வேறு.

கற்றார் தெரிநூற் றெளிவினை காண்கிலேன்
கற்றவ ராயுங் கவிப்பிழை செப்பிடேன்
கற்றவராருங் களிப்புறுங் காவியம்
கற்றவர் பாதம் வணங்கிய காணிக்கை.

வேறு.

நான்றாவேதத் துயிர்முடி தாங்கியும்
நான்குயார்களில் ராஜெனத் தோன்றினார்
நான்கு ஜாதியும் நட்புடன் றுதித்திட
நான்கி மாமிலு முயருறும் அலிஹுஸைன்

சஞ்சலமுறும் போர்வலுற் றாங்கியே
வஞ்சகமறும் வல்லவர் புத்திரர்
மிஞ்சக் கண்டவர் மாறிடுங் காலத்தி
லஞ்சி நின்றதின் ஆரணம் மெய்யதாம்.

சுவரி லொற்றவுஞ் சுன்னத்து நுனியினிற்
றவறு கண்டிடத் தையலாம் விருத்தையில்
உவரிறக்கிய மணிகிளை யரசென்
நவம் விளைத்ததை நவிலுவாம் நேர்மையாய்.

ஆவணக்காப்பக
149423
சென்னை-600 008

...ருபவப் பஞ்சக்ஷா

தோங்கல்.

மக்கா ஷ்ஹம்மது ஜெனனமாகி
    மதினா நகரிலே யரசுசெய்து
பக்கக்குலத்துறங் குபிறரசை
    பதைக்கப் போர்செய்து துவஜம் நாட்டி
சக்காலுதையமாய் நின்றார் யாரும்
    சரண மலரிணைத் தினம் பூஜிக்க
ஹக்கனுடரில் மறைந்த பின்னர்
    ஹுஸைனில் வெளியான நவமுரைப்பாம். (1)

விஷத்தால் விருத்தையில் வெளியிலான வீணனெசீதவன் நிலைவணங்கி
விஷத்தைப் பொய்யாக்கும் மொழியினைப்ப நீசச்செயலாக நபிமரபை
புஜத்தின் வலுவாக அவன்மதித்து பொல்லாப்பகை மூட்டி உஸைன் மகவை
அஜலில் நிருத்திய காலக்கூத்தின் ஆகம் விளைந்ததை உரைசெய்வாமே

கருபலாவினில் உஸைன் றலையை
    கடிந்து கொய்தெடுத் தேகியபின்
தருமகுண ஹுஸை னிடுப்பினிலே
    தரித்த அரைஞாணைக் கண்டறிந்து
உரிமையாகாத பயலாகினேன்
    உஸைனினரைஞாணை யவன்கழற்ற
அருமைக்கரமுயர்ந் தவன் முகத்தை
    அறைந்து கண்ணொன்றை கழற்றியதே. (3)

பிண்டமாகி டப்புழுதிமண்ணில் பிராண னடங்கியே யிருந்த வுஸைன்
கண்டபயல் குற்றஞ் சகித்திடாது கண்ணைக் கழற்றிய,புதினங் கண்டு
மண்டலத்தினி விப்புதினம் மாந்தர் யாவருங் கண்டறிய [விட்டான்
துண்டாய்க் கரந்தன்னைப் பயலாகினேன் துணிவாய் நெருங்கியே வெட்டி

வீரப்புலியலி பெருமகவின்
    விந்தை மகிழ்வினை யெவருங்காண
தீரமற்றதாய்த் தலையைக் கொய்து
    தீதனெசீதாளர் சென்ற பின்னர்
சாரங்கண்டிடக் கண்பொடித்த
    தத்வாநவமதைக் கண்டறிந்தேன்
பாரமிது கரம் பாருமென
    பயலுமெசீதாள ரிடத்திலீந்தான். (5)

வளர்ந்த பயலவன் பொருளாசையால் வதைத்த பிண்டமாயிருந்தவுடல்
தளர்ந்துபோனதா யவன்மதித்து தரித்த அறைஞாணிலாசை வைத்து
பழத்தைக் கண்டிடும் பறவைபோல பயலுங் கொடியினை விரைந் தவிழ்க்க
பழத்தின்வண்டொப்பாய் வெளியிலாக பாங்காய்விளாநவம் பிதிவிகேட்டார்

குருவாய் நபிகிளை உயர்விலாக
  கோளனெசீதாடர் ஜெயிப்பாய்க்காண
தருவாயக் கரந்தழைத்த தென்றுங்
  தன்னிலுறுங் கண்ணைப் பொடித்த தென்றும்
பெறுவார் யாவரும் காணும்படி
  பெருமைக் கரந்தனைக் கொணர்ந்து வந்தீர்
குருவாய் மதிக்காமல் செய்தகுற்றம்
  ஹுசைனைப் பொருப்பிக்கக் கடனுமென்றார் (7)

புவியிலடங்கர்த அலிமகவை பொல்லாப் பகைமூட்டி சமர் தொடுக்க
புவியார் நிந்திக்க சக்கமைத்து பிரியமுடன் வரத்தூதனுப்பி [பெடுத்தார்
புவியின் மகிமைக்காய் பெரும் பாவத்திற போனூர் செய்தவர் ஜெயிப்
புவியின்நீதிக்கு மாறமைத்தோம் புண்யஹுசைன்றனை புகழ்வோமென்றார்

கொல்லும் புலிமாள நினைத்தஞ்சியே
  கூடும் வேடுவர் கானகத்தில்
எல்லைக்க பத்தமாய் விளையுமென்று
  யெவரும் அஞ்சிடுந்துப்பாக்கியால்
கொல்லும் வாறதாய் நாங்கள் கொய்ய
  கொன்றபாவமே விஷப்புகையாய்
கொல்ல சத்தாகி விளைந்த கரக்
  கூர்மை வியப்புக் காய்த்துதிப்போமென்றார் (9)

தலையை கொய்தது பெரிதுமல்ல தனங்கள் பெற்றதும் பெரிதுமல்ல
தலையை யறுத்ததி லட்சம் பங்கு தாங்கும் நாளெல்லாம் நமைப்புகழ
தலையை யகன்ற நற்கரமெழுந்து தருகண்ணுளனின் கண்பொடிக்கத்
தலையைப்பலியாக முன்விடுத்து தழைத்த கரத்திற் காய்ப்பணிவோமென்றார்

பட்டா கூர்மையால் தலைவிழுந்தும்
  பலனென்றமையாது வலு விழுந்தும்
பட்டந்தாங்கிய யெசீதரசின்
  பலமுங்கிளையதுஞ் செழித்ததென்று
பட்டந்தாங்கிய பெருமரசிற்
  பதுங்குஞ் சிங்கமாய் மூளைத்தகரம்
பட்டம் பட்டமா யுயரிடினும்
  பகைத்தாரை யழிப்பதின் தருவாமென்றார். (11)

தலையை யறுத்தவர் கரத்தைவாங்கி தப்பாய் நாம்செய்த குற்றம் யாவும்
விலையாயெம் முயிர்குருபானிட்டோம் விளைந்தபவம் யாவுந் தொலையும்படி
கலையாய் வெளிவந்த வியன்கரமே காப்பாய் நவமுற்றதருவே யென்றும்
கொலையாய்த் தலைகொய்த நீசரெல்லாங் கூடித்தினம்நொந்தங் கழுதனரே

துப்பாய்த் துலங்கிய கரமதனைச்
சூதாய்க்கொன்றிடு முமையாக்கிளை
உப்பாய் மதியாம லுயர்கனியாய்
உள்ளமுருகியே தினகாலமும்
மப்பாய கற்றுமற் பயந்தயர்ந்து
மக்கள் மக்களாய் பணிந்துவர
தப்பாய் கிருத்திடக் கரந்தடையாய்ச்
சமையவேறொரு பகையானதே. (13)

உமையாக் கிளையினர் களைப்பொழிய உசைனுர் பந்தெலாமாளும் படி
சுமையாய்ப் பெருகியபோர் வலுவிற் சொந்த கரங்கண்ணை பொடித்ததாலே
நமையுந் தீங்கெதுஞ் செய்யுமென்று நாடிக் கூடியே தினந் தொழுதார்
உமையாக்கிளை யாரிலிரு பிரிவாயு ஷைனின் கரத்தினுல் பகை யானதே

சங்கை நபியுல்லா ஜிபுரீயிலாற்
றமது பேருஷைனடங்குங்காலம்
தங்கத் தெரிந்திடும் மணலெடுத்து
சமையுங்காலத்திற் குறிப்பறிய
பங்கப்படுத்திய கிளைஞர்களில்
பலமுந்தணுவு மோர்ந்துரைத்த நபி
மங்களமொழி நிறைவேறிட
மாய்கை உமையாவிற் பகையானதே (15)

அஜலாற்றலையினை யறுத்தெடுக்க அடங்கிப் பொருமையா யிருந்தவுடல்
அஜபாய் தலைக்கேழு தலையுமாக அகன்றூர் கொண்டிட நவம் விளைத்து
அஜபாய்க் கரமோங்கிப் பயலின் கண்ணை அந்தகனுக பொடித்தவேகம்
அஜபாய நதினந்தியிலாக அகன்றவுமையாவிற் பகையானதே

முன்னாளாண்டதோர் மாபியாவின்
மூர்க்க கிளைஞர்கள் கரப்புதினம்
நன்னூலாகவே பரம்பரையாய்
நகைத்தார் நகைமாற்றித் தினம் பூஷிக்க
மன்னர் கிளைவழி கரப்புதினம்
மடக்கவேண்டுமென் றிகழ்ந்து அவர்
சன்னையேறிய கும்பலாகச்
சமைந்தா ரோர்முக மாகவேதான் (17)

காச்சல் தலைவலி கண்ணோவினுங் கால்ருஜனியேதுந் தோன்றிடினும்
பாச்சல் வீரேற்றி மடிந்தவுஷைன் படையில் வலுவற்ற செயலறிந்தும்
மாச்சல் நொம்பலந் தணியுமென்று மதித்து கரந்தனைத் தினம் புகழ்ந்தால்
சூச்ச வில்லங்கந் தணியுமென்று சூழ்ந்து புகழ்வதைத் தடுப்போமென்றார்

மார்க்க நடத்தைக்குக் கரந்தொழுதல்
மன்னிப்படையாத பாவமென்றும்
பார்க்கவூரெலாம் புகழ்கின்றதும்
பகைத்தபேர்க்கிது யிழிவாமென்றும்
கூர்க்கப் பார்க்கவுங் காணொண்ணனைக்
குலமாய்த் தெய்வமாய்ப் புகழ்கின்றதும்
ஆர்க்குந்தகாதென மறையாளர்கள்
அடமாய்ப் பொருமைகொண்டரசிற் சொன்னார் (19)

MAR 1921
MADRAS

சபாயத்தெனுங்கொடிச் சிறப்பிலான ஷருதார் முஹம்மது உயிர்மணியை
அபாய சங்கடத் தீதேற்றியே அடாத்தாய்க் கறுபலாயிடம் நிருத்தி
உபாயமா யுமையாக்கள் கொன்று உயர்ந்த அரசனைக் கிளைவளர [றார்
ஷபாயத் துறுதியாய்க் கரந்தொழுதால் ஜெயித்தகொடிக்கிதுதகாதுயென்

பாலர் பாலியர் பிணிநோவுறிற்
பாங்காய்க் கரத்தினு லுஷைனினமம்
காலசுகமுற வேண்டி நேர்ச்சை
கலங்குங் காலத்திற் கட்டிவிட்டால்
ஜாலமுறும்பிணி நொம்பலங்கள்
ஜனத்தில் மாறியே சுகமுண்டாகி
பாலர் பாலியர் மகிழ்விலாக
பணிந்து புகழ்வதுந் தீதாமென்றார் (21)

உகந்தார் நபியுல்லா கிளைவழியை உகப்பாய் மதியாமற் சினப்பிலாக்கி
ஜெகத்திலுமையாவின் கிளைவளரச் சிங்கப்புலிமகன் றலையறுத்தார்
அகத்திற் றணியாத நாமமொன்று அதிசயித்திடும் நவம்விளைக்க
இகத்தில் நம்கிளை தொழுவதெனில் இன்பப்பலனெலாங் கைப்பாமென்றார்

பட்டந் தாங்கிடும் புஜபிலனை
பயஹாம்பர் துணை பலிமகவில்
தொட்டுப் பார்க்கவுந் துணைதாங்கவும
துணிவு அமையாமலுமையாவழி
பட்டமரமொப்பாய் கறுபலாவில்
பார்ப்பார் மனமெலாங் கசிந்துருக
நட்டப்படுத்திய பலன்மறந்து
நாமே தொழுதிடல் நகைப்பாமென்றார் (23

குமம்பர்தனில் வருங்கலகத்தையுங் கோளாற் பணிந்திடுஞ் செய்கையையும்
இம்பாய்ப்பிரிவான அடாத்தினையும் இகழாய்ச் செய்வாரின் மதிப்பினையும்
கடுப்பாய் நடப்பாரின் கொள்கையையுங் கலங்கடப்பாரின் கிரிகையையும்
தடுப்பா யரசனே தயவுசெய்து தழைத்த கரமனுப் பகர்ந்தோமென்றார்

குடிகளுடைய நன்மனமானது
குணங்கிப்பேதக நோவுற்றிடில்
குடியில் நேரிடுஞ் சஞ்சலத்தைக்
கோக்களிரங்கியே கார்த்திடாமல்
குடிகள் பேதகஞ் செயவிடுத்தால்
குமுறுந்தீமையை யரசுதாங்கும்
குடிகள் சலிப்புசந் தோஷமாகக்
கோவேயுமதிடம் மொழிந்தோமென்றார் (25)

சிறும்பாம்புவின் விஷந்தணிக்க ஜெகத்திற் சஞ்சீவி மருந்துமுண்டு
வீரப்போர் தாங்கும் காலத்தினில் நிருத்திவிடுஞ் சமதானமுண்டு
சாருந்தப்பினில் மன்றாடினால் தணியுஞ்சினமது குணமுண்டாகும்
காரும் நாம்சொன்ன கரவழியை கடிகை நேரத்திற் றணிப்பீரென்றார்

நீதிக்காகவே மழையமைத்தான்
நீதிக்காகவே செல்வமீந்தான்
நீதிக்காகவே சுவையளித்தான்
நீதிக்காகவே த்வம்விளைத்தான்
நீதிக்காகவே கோனமைத்தான்
நீதிக்காகவே வயதமைத்தான்
நீதிக்காகிய யரசேயாங்கள்
நிகழ்த்து மொழிகேட்டு விரைவீரென்றார் (27)

மெலிந்தவுவைஷன் வழி புதினந்தன்னை மிகைப்பாய் வளர்தலின் தொனி
யைக்கேட்டு
வலுமைபெருமையு மறிவோமென்று வைத்துவணங்குவோர் வாலாமென்று
பலித்தகரத்துடன் பணிந்தோரெல்லாம் பதறிவந்திட ஆடர்செய்தார்
சலித்தகாலத்தின் றவமீதென்று சார்ந்த குழுவினர் விரைவாய்வந்தார்

வெட்டிற்பித்துநாவே மிகைத்ததென்று
விண்டானுதியுங் கலாமிலன்று
கட்டின் வேதத்தின் ஷபாயத்தேக
கறுபவாவினிற் பேர்முடித்தார்
துட்டின் வாடைக்காய் பாசம்போக்கி
துரோகநிலே பூண்ட அறியாமையை
விட்டுயின்புற நவமறிந்து
வேண்டுங்கரமதைக் கொணர்ந்தோ மென்றார் (29)

மறைகள் யாவிலுந் துலங்குங்குரு மகம்மத்யாவெனு முண்மைத்தூதின்
நறையாய்க் கனந்தாங்கி வளர்ந்தமகன் நட்பையறியாமற் குபிரோரோத்து
மறையின் கனியான நபிக்கொழுந்தை மார்க்கக் கெடுதலாய் செய்தகுற்றம்
நிறைவாய்பொருத்திட வேணுமென்று நேர்ந்து தொழுதிடுங் காமீதென்றார்

தீங்குதணிந்தவன் பொருக்கும் வரை
திவ்ய நாயனும் பொருக்கானென்று
ஓங்குமறையாவும் துதியாய்விள்ள
ஒழியாத்துன்பமாய்ச் செய்தோமென்று
வாங்குங்காமத்தால் தொழுதிடினும்
வளர்ந்த கொம்பாவந் தணியாதென்று
நாங்களுணைன்கர நவமறிந்து
நபியின் கிளைக்காகத் தொழுதோமென்றார் (31)

புதினச்செடியாக வளர்ந்தமாம் புஜத்தில் வீரராய்த் தொனித்தகிளை
மதியை வருத்திய நபிக்குகந்த மகவின் மகவாக வெழுந்தமதி
சுதியேயற்புத மாகவருஞ் சுல்த்தானாகிய ஜென்னக்கனி
கதியாயுதவுவா ரென்றறிந்து கடாட்சப் பேர்பெறத் துதித்தோமென்றார்

சுவனப்பாலிய ரிவர்களென்ன
சுகிர்தமகிமையைப் பெற்றகனி
கவனமுள்ளாரிற் களிப்புவரக்
கருணைபுரிந்திடச் செய்யுங்கொடி
சவனத்தடங்கலா லெதுவரினும்
சக்கைமாற்றிடுஞ் சுகசஞ்சீவி
புவனந்தனி லுறுந்தீங்ககலப்
புலியின் மகவினைத் துதித்தோமென்றார் (33)

பொருக்காப்பவங்களை மலைபோல்செய்து புகழைமறையாக மதிக்குங்காலம்
சுருக்காய் அஷைதேறி யழியுங்காலம் சினந்த புகழ்கனி சுவையுறாது
பெருக்கால் நிரம்பிய குபிர்பாவத்தை பெரிய நவங்கண்டு மறந்திடுதல் [றார்
சிருக்காயமையா துஷரகாமென் றுசிறப்பாய்த்தொழுதுயாம் துதித்தோமென்

நிந்தையாகிய ஜாதியோனின்
நிர்வாண காலமுளைத்த பின்னர்
சந்தை கூட்ட மாயவன் சமாதி
தருந்த புதினத்தாற் குவியக்கண்டு
வந்தார் யாவருந் தொழுதிடாமல்
மலர்ந்தமனுவினை நிந்திப்பவன்
தந்தைமகன் வழி யல்லவென்று
தக்கோரறிவதின் பலனுமென்றார் (35)

ஹராமிலுதிப்பவன் செய்கையது கபூவிலாஞ் செயல் ஹராமே யென்பான்
ஹராமாயொலிகளின் ஙியாரத்தினை காணப்புகுவதிற்பொருமைகொள்வான்
ஹராமாய் நபிகிளைநாமஞ்சொன்னால் ஹக்கன்பொருக்காத குற்றமென்பான்
ஹராமினிழிகுலக் குலமிதுவாங் கற்றாரறிவித்த செய்கையென்றார்

மதலையாய்த் தொட்டிலாடுங் காலம்
மலக்கல் மகிழ்ந்தாட்டப் புகழிலானார்
சதமாய்ப்புவி வந்ததூதர்களில்
சங்கை முஹம்மதின் சந்ததியார்
அதமாய்க்குபிர்குல அரசர்மாள
அடக்கி நிருத்தியே அலிமகவில்
உதையமாகிய பஞ்சாக்கரம்
உதித்தநவ நாமந் தொழுதோமென்றார் (37)

பணியார் பணிந்திடுந் தவநிதியார் பாத்திமாபீவி பொற்கிளியார்
அணியாய் நிறம்பிடும் நவங்களிலே அன்பாய் விளங்கிடுஞ் சுயநிதியார்
துணிவாய் நிறைவாரின் தவாக்களிலே துலக்கமுறுஞ் சுகநண்புடையார்
மணியாய்த் துதித்தேற்றும் பஞ்சாக்கரம் மகிழத்துதித்திடுந் தவமீதென்றார்

அவனிதனிலுறும் அமல்களெல்லாம்
அவனின் கருவது யெண்ணமொன்றும்
அவனியரசரில் நீதியாவும்
அமைச்சாய் வீரமாயிருந்துவாழும்
அவனிதனிலுறும் அரசர் மெய்க்க
அடிமை நாங்களாய்ச் செய்கதில்லை
அவனி மனுச்சொல்லும் பொறுமை விட்டு
அன்பாய் விடுக்கவே கடனுமென்றார் (39)

தடுத்தார் கெடுத்தாரின் வாய்மொழியை தாங்கு மரசுதான் தனிலுணர்ந்து
விடுத்தார் கொடுத்தாரை விளங்கிடாமல் விளங்கும் வரத்தினற் காமதனை
கொடுத்துப் பணிந்திட யிணங்குவது கூர்மையுள்ளவர் நகைப்பாரென்று
அடுத்தார் யாவருங் காணும்படி அழகு மொழியாக அரசுரைத்தான்

ஆகாதென்றிடு மறைமொழியும்
ஆகுமென்றிடு முகப்புரையும்
பாகமெதுகளி விருப்பதென்று
பதிதானுணராமல் விடுவிப்பதும்
மோகமாகவே தோற்றுதென
மூளைத்த யிருபிரி வானோர்களில்
நாகம்போற்சீரி ஆடரொன்றை
நாட்டினாரிறை பிதிவிகளில் (41)

...600 005.

ஒக்கனூரைத்திடும் ஆடர்மாற்ற ககனமலக்கவன் அஜாஜிலானன்
மக்காகுரைசிகள் நபியைமாற மதினூற்றன்னிலே அரசுவைத்தார்
டிக்கால புஜஹில் நிறம்பி நிற்கத் தலைதானரும் வரைபோரிலானன
ஹக்காய்ப் பஞ்சாவின் கரமதனை கருதும் சுல்ஹினர் பகரக்கேளீர்

கறுபலாவினில் நபிகிளையைக்
கலங்கப்படுத்திய பலன்களெல்லாம்
கொறுபானுகவே தத்தமுயிரை
ஹுசைனின்போருக் காய்க்கொடுத்திடினும்
தருவாய்த் துலங்கிடுங் கெதியே யல்லால்
தப்பாய்க் கரத்தினை துதியோமென்று
கருவாய் வளர்ந்திடுந் தீக்குண்டத்தில்
ஹக்கே ஹுசைனென வருவீரென்றார் (43)

நயராய்ப் பிணிநோவு யெதுவரினுந் துலங்கு முஹறத்திற் றொடர்ந்துவிடில்
நயமாய் வேறொரு மருந்திடாமல் நடிக்கு முஹைனுமங் கெதியேயென்று
மயமாய்க் காணிக்கை வைப்பதல்லால் மாற்றவே றொருவகை செய்யாமல்
சுயமாயுஹைன் கரந்தஞ்ச மென் றீர்சுருக்காயாடரில் விரைவீரென்றார்

கொன்றார் பவமெல்லாந் தொலைந்தகல
சோதிற் கரப்பஞ்சா ஷாஹீதென்று
நின்றார் குழுவின ரெவரெனினும்
நெருப்புக் குழிதனிலிறங்கியேதான்
மன்றாரறியவே மறுபுரத்தில்
மலர்ந்தமுகமாக யெழுவீரெனில்
நின்றார் யாவரும் ஆரூன்றசீத்
னீதி குற்றத்தி லமையாரென்றார் (45)

அனலின் குண்டத்தைத் தாண்டிவந்து அதனின் வீறினலழிந்திடாது
மணலிற் சிறுபிள்ளை குந்திக்கொண்டே மகிழும் விளையாட்டாய் மணலைபள்ளி
குணமா யவரவர்க் கிசைந்தபடி குந்திமணலினைச் செயும்பலனுய்
அனலையொப்பிக் கயிடுமொடரை அரசன் மொழிந்ததாலு கந்தோமென்றார்

மையல் சுகமெனத் தினகாலமும்
மாதர்களிற் சிந்தைநாட்டினவர்
மையல் வெளியாக உடல்தளர்ந்து
மாதைக் காண்கையில் வெறுப்பிலாவார்
மையல்கொண்டிடாத் துரவியர்கள்
மங்கைச்செயல்களை நீக்கும் வாறாய்
மையல்விளங்கிய அரசர் தாமும்
மதித்த ஆடரை யேந்துரைத்தார் (47)

கனகப்பொன்பொருள் தியாகம்பெறக் கறுபலாவினி லுலைஷன்மரபை
கனத்தசேதமாயுயிர்வதைத்து கைச்குழந்தைக்கும் நீர்கொடாமல்
கனத்த வீரமாய்ப் பலாட்யஞ்செய்து ஹக்கனு ஹந்திடும் நபிமரபின்
கனத்தைக் குறைத்த பெருமை சோரக் கனலில் மாளினும் புகழாமென்றார்

குலத்தார் பிரிவான கவலையதும்
கோவாலிறங்கிய ஆடரையும்
பிலத்தாற் பணத்தாலுந் தாங்கிடாது
பெருக்குந் தனுவதுங் கெலித்திடாது
நலத்தார் நமையெலாங் காத்தவர
நன்றிவருங் காப்பெரும்புதினம்
பிலத்தின் நலனென்றே கார்க்குமென்று
பெரிதும் புகழ்ந்தவர் மதித்தகன்றார் (49)

அரசன் மொழிந்ததோராடரினை அலட்டாய் மதியாது செய்வோமென்று
சிரசுமாறினு மூஹப்பிழக்கோம் ஜெயித்து டஞ்சாவைப்புகழ்வோமென்று
வருவோம் விடைந்தெனப் பிதிவியேக வாதில்வாதிட்ட குழுவினர்கள்
முரசுகொட்டிய விளப்பரத்தை, மொழிவேன தன்பலன் உணர்வார்களில்

கொடுமைப்ப பவமெல்லாந்திரண் டெழுந்த
குறைசிகளிலுள்ள அபுஜகிலும்
திடமாய்மதியதை நபியழைத்து
செம்மல் ஹபீபினை ழதால்வியாக்கப்
படுமாயென அவன் நினைத்தகோலம்
பங்கமுற வேயங்கிருளதாகி
தடுமாறுங்காலஞ் சசியெழும்பி
தயக்கந் தீர்த்தநி னெப்பாமென்றார் (51)

சாமில்வியாபாரஞ்செய்துவர ஷருதார் முஹம்மது சென்றகாலம்
காமுசரான குபிர்குலத்தார் கல்லையு பாத்தி லேற்றிவைத்து
சாமுநகர் வரப்பட்ட பாதம் சலையார் செய்திடும் விருந்தருந்த
தாமும் வரவேண்டுமென வழைத்து தாங்காக்கல் தள்ளி அயர்ந்தநொப்பே

மக்கா மனையினிற் படுத்தநபி
மதினச்சென்றிட வரும்வழியில்
சக்கால் நிறம்பிய குறைசிகளிற்
றலைவர் சிங்கத்தின் பிலனெப்பவர்
சிக்கப்பிடித்திட வெருண்டோவிச்
சேர்ந்தருகையிற் சந்தேகந்தோன்ற
குக்கல் முசலினை யிழந்ததொப்ப
கொள்கைமறந்தவர் வியர்ந்ததென்றார் (53)

சுரக்கத்தென்பவன் குறைசிவீரன், துணிவுளான் சிங்கந்தனக்கு அஞ்சான்
புருக்கிலேறிய நபியைக்கொல்லப் பொருந்தி வீதியிலேகுங்காலம்
சுருக்கத்தின் பிலன் குன்னலுற்று, சுனைமிழுந்ததின் பலனிஞெப்பாய்
அருக்குணங்கொண்ட அஞ்ஞானியா யறிந்தசெயலொற்றதன்மையென்றார்

இன்றே நம்மவர் பகைகளெல்லாம்
    இல்லாதோட்டிட உமறெழுந்தால்
நன்றாய் விளங்காத நபிவழியை
    நறுக்கிவீசிடுங் கிரியாவார்
யென்றே வீறேற்றி வரும் வழியில்
    எதிரேமாடே கச்சலித்த கன்றார்
மன்றிலாளவே கரப்புதினம்
    மலர அறிந்தவர் வியந்ததென்றார் (55)

பஞ்சாக்கரந்தொழல் பாவமென்று பகைத்துச் சினந்திடும் பேர்வழிகள்
அஞ்சுக் தீக்குழிதனி லிறங்க அரசன் நல்லதோராட ரிட்டார்
பஞ்சாப் பலனிதிற் கார்த்திடாது பரைந்தாரதிற் குந்தமடிந்திடுவார்
கஞ்சாவுகப்புற்று உடல்மெலிந்தார் கதையின் வாறதாய் முடியுமென்றார்

புதிய வருடமாய் முஹர்றமாதம்
    பொருந்த அதிலுமோர் பெரியநாளாய்
விதியாய்ப் பத்தாம் நாள் உசைன்பேருற
    விதித்தநாளிதா மெனவறிய
சதிராய்க்கூடியே குழுவினர்கள்
    தகுந்தவிறகினைச் சேர்த்ததனை
குதியாய் மகிழ்ச்சியாய்க் குவியக்குவிய
    கொழுத்துந் தீக்குண்டம் நிறைத்தனரே (57)

உமையாக்கிளைதனிற் பிரிவானோர்கள் ஊக்கமகிழ்ச்சியா யெழுந்தவர்கள்
சுமையாய் விறகினைச் சுமந்துவந்து துலங்குமலை யொப்பாய் குவித்துவிட்டு
நிமையாத்தம்பிக்க யெழுங்குழுவார நீண்ட நாட்டுன்ப முடிவெடுக்க
சமையமிதுவன்றி வேறில்லையால் ஜல்திகாண் போயென்றுகந்திருந்தார்

தீட்டாய்ப்பத்து வாவுங்குவியலாகத்
    திரமாய் நம்பவே கொடுத்துவிட்டார்
நாட்டாரிதுகளை திருத்திவர
    நல்லமாஷர்நா மாவுமிட்டார்
பாட்டன் பூட்டனிலில் லாக்கிரிகைப்
    பழகிற் புதினத்தை மிகைச்சுமென்று
கூட்ட முற்றவர் நெஞ்சமெல்லாங்
    குணமாய்ப் புகழ்தாங்கி மலர்ந்தனவே (59)

கூபா நகர்தனிற் கலாம் விளங்க கூட்டி வரவேண்டுமென்றனுப்பி
ஷாபாகறுபவா நடுவழியில் சமராய் மாய்த்தவர் ஜெயிப்பெடாமல்
துபாவெள்ளம்போல் நொக்ஷழியத்துணிவாய்ச் சிரம்வெட்டிப்போர்முடிக்க
ஆபாசங்கொண்டா ரறிந்திடாது அடாத்தா யேர்ததை யறிவோ மென்றார்

பாச்சற் குதிரைக்கு வீறேறினும்
பரந்து பரந்தாடி மிதிகொள்ளினும்
கூச்சலாயிடுஞ் சமர்க்களத்தைக்
கொன்று முடித்திட விதாமெனின்
நீச்சல் கொள்ளினுங் கரைகண்டிடும்
நேர்மையுள்ள தாமெனினும் அது
பாச்சற் பாய்கையில் நெருப்பைக்கண்டால்
பதறும் வாறுப்பாய்ச் சமைவாரென்றார் (61)

கார்க்காக்கிரிகையில் மனஞ்செலுத்தி, காணும்பேரிது யெனப்புகழ்ந்து
பார்க்கவெவர்களும் பிரமைகொள்ள, பயலாலறுபட்ட கரமுழத்தை
மார்க்க முறைபோல மனதுருகி, மதித்த நாள்வரை பிணுக்கமுற்ற
நீர்க்கமாறியே யழியுங்காலம். தீயில்மாண்டிட விதித்ததென்றார்

எந்த நாளினிலிதை ஜெயிப்பார்
எடுத்தவேலையை உகந்து செய்வார்
பந்தங் கொளுத்தியே விழுங்கிடினும்
படர்ந்ததனற் குண்டந்தாண்டிவிடார்
மந்திரமுறை பதிப்புமில்லை
மகானைப் பூஷிக்க உடலொன்றில்லை
வந்தார் வெருத்தாரிலுகந்தவரின்
வரங்கள் யாவையும் தெளிவோமென்றார் (63)

பஞ்சாயேழன்று புரவிமீது, பாங்காய்க்கரந்தாங்கி யிருப்பவனில்
சஞ்சலமெதுந் தோன்றிடாமல் தனது ஜாரின்றி மதிமயங்கி
தஞ்சமுறும் பதங்கெதியேயென்று தருவாயதனையே துதித்தலன் [ன்றார்
விஞ்சையசுமாவாய் விளங்காவிடில் விளைந்ததனற் குண்டில் தெரிவோமெ

குற்றம் பொருப்பவன்தான் யாவையுங்
கூறும் அருட்பேறின் பலனிலாக
சுற்றத்துதியினர் பலன்றேணிக்க
தூய்ய முஹம்மதின் மறையிற்காண
கற்றவத்துளார் தொழுமாதியின்
கலவுபெரும் பயிர்கரத்திற்றோன்ற
சித்தந் துதிசெயும் நபிகிளையை
சேக்குமுவாக மதித்துநின்றார் (65)

பிரிவாய்ப் பொறுமையாய் உமையாகினை பெரிதும் புகழ்கரங்கெடுதலென்று
விரிவாய்ப் பகைமூட்டி சரசர்முனம் வேண்டுமெனுக்களும் பத்துவாக்களும்
சரியாய் நிதானிக்க விடுத்த குலத்தார்கள் சீற்றமே அனற்குண்டாக
நெறியாய்த் துதித்திடுங்குழுவினரில் நேர்ந்தநாட்டத்தின் றேற்றங்கேளீர்

துக்ஷணச் செய்கை துணையிலாக
தாயகரந்தாங்கும் மகானினுமம்
லெக்ஷயுறமென மதித்தவர்கள்
இரட்சகர்வழி மதிவல்லாரை
பக்ஷங்கொள்ளாது தீமையென்ன
பழிப்பாய் நிந்தித்தார் யெண்ணம்யாவும்
நிக்ஷயம் பெறத்தனற் குண்டத்தை
நீராய் மலராகச் செய்வானென்றார் (67)

தாங்குந்துணைவலுக் கொள்வோமென்று தளர்ந்தகாலத்தில் கரம்விளங்க
ஓங்கிப் படித்தோரின் ஊர்ச்சிதத்தை ஒழித்து மறைப்பாக நீக்கிவிட
பாங்கி மகனுக நினைத்தோரெல்லாம் பாவச்செயலாள ரெனயிகழ்ந்து
வாங்கும் புதினங்கள் கரத்திலாக வருவாய பாயத்தின் துணையென்றார்

கருமாதி பிண்டம் வெளியிலாக
கார்க்குங் குசறத்தி வாலமீனே
பருவகாலத்தில் குறிப்பறிய
பகர்ந்தோய் புஷ்பவதி தானென்று
கெருவமுற்றவனெவ னெனினும்
கிலேசப்படச்செயும் கிருபையோனே
குருவாய்ப் பஞ்சாவில் நாங்களானேன்
குமுறுந்தீ குண்டிற் காப்பாயென்றார் (69)

அம்பியாக்கினை சிங்கமான அலியார் மகன்வழிப்பு தினந்தோன்ற
கெம்புமனத்தீமை கரிந்ததாகி கேவலப் படத்தனற் குண்டத்தை
சம்பிமடிவதாய்ச் சினந்தேற்றினும் சமையமுதவாரின் குணமறந்தால்
தும்பிற் கம்பியைக் கோர்த்து வாங்குந் துய்ப நாயனே துணையாமென்றார்

வாங்கின் காமத்தில் நிந்தைசெய்யோம்
வக்குத்து ஐந்திலு மொன்றைநீக்கோம்
தாங்கும் விரதத்தில் நாள்குறைக்கோம்
தழைக்கும் சதக்காவை நீக்கிவையோம்
பாங்காய் ஹஜ்ஜியிலாகிடுவோம்
பயகாம்பர் நீனே யெங்கள் வழி
மாங்காய் நிந்தித்த தனவிலாக
மணமாய்க் களிப்பிப்பாய் ஹக்கேயென்றார் (71)

குலமுங்கோவுமே கலங்சம்படி குவலயத்தார் யாருமயரும்படி
பிலனுற்றலக்கிய பஞ்சாக்கரம் பிழைபாதென யாருஞ்சினமேலுற்று
நலனை மாற்றிய பேய்க்கூத்தினை நல்லார் கண்டிட நாமெல்லோரும்
ஜலமாய் நெருப்பனல் மாறும்படி ஜல்தியொற்றமை யாவோமென்றார்

பகையாய் சேர்ந்ததோர் சபதந்தன்னை
பாங்காய்ப் பொடிமதிப்பாகும் வரை
நகையாய் மதியாது நோயினுப்பாய்
நணுகிவரும் வரை ஜன்னியாவான்
குகையாய் வெளியான அனற்குண்டத்திற்
குதிக்கும் நாள்வரை நாமெல்லோரும்
துகையாய்ப் பெருகினும் உடலொன்றாக
துலங்கு மொன்றிப் பிலாவோமென்றார் (73)

நீதித்தலைவனும் நெருப்பனலில் நீந்திக்கரைகாண விடுமாடவரை
ஜாதிக்கிழிவுபோல் சினந்திடாமல் தகுந்தபுகழ்மணம் மிகவுந்தோன்ற
ஊதிப்பற்றியெந்தனற் குழியில்விழுந்து கெலிப்பாகும் நாள்வரையும்
பாதியுயிர்த்துணை மனைவியாசை பக்தருஹப்பது ஹறுமாமென்றார்

இருபோது கொள்ளும் உணவுதண்ணை
இடஞ்சல் நீங்கும் நாட்கழியும்வரை
ஒருபோதுண்ணவுந்தக்கு வாக்கொண்டு
ஒற்றார் பொய்புறங்கோள் சொல்லாமல்
பெருவாரறிந்திடுங் காலம்வரை
பெண்பால் சோரமும் விலக்காமென்றார்
மரியாதைகொள்ள விரதம்வைக்க
மகிழுங்கரத்தினர் விதியாமென்றார் (75)

அனலின் காந்தியாய்ச் சுழன்றிடாமல் அருளாற் கரந்தாங்கிமகிமையுறில்
தனலைத்தாங்கிடும் நன்றிக்காகத் தளமாய்ச்சேர்ந்தவர் யாவர்களும்
பிணங்கள்குவிகின்ற பிணிவரினும் பீராம்பஞ்சாவிலுகப்பு வைப்போம் [றார்
மணங்களணைந்திடோம் மஸ்தருந்தோம் மந்திரஅசுமாவில்விரைவோமென்

நடத்தி முடிக்கும் நாள் முஹர்றந்தோன்றில்
நயத்திலுறுந்தொழி லெதுவுஞ்செய்யோம்
தடத்தில் மிதிக்கொணுத் தீக்குலத்தோர்
தரமாயுயரினுந் தணிந்திருக்கோம்
ஜடத்தின் சுகப்பேறு யெதுவரினும்
சலிப்புநாளினி லலங்கரியோம்
கடக்குந்தீக்குண்டந் தாண்டும்வரை
ஹஜ்ஜைதனே விரதமா யிருப்போமென்றார் (77)

தடுப்பார் வருவினுற்றீ தெய்தினுர் தாங்குந்துணையாரிற் பகைவரினும்
கடுப்பாய்ப் பொருமையாய்க் கொலையெய்தினுங் கனகசெல்வத்தாற் பகை
[மூளினும்
விடுப்பார் வரவெல்லாம் விஞ்ஞைபதாய் விளக்கமதில் மாறுதோன்றிடினும்
கடுப்பாயதுகளை நீக்கிவைத்தல் கடக்குங் குண்டிற்குவிலையா மென்றூர்

கரத்தின் விருப்பத்தி லெவனெருவன்
காந்தியுறுந்தனல் முன்னில் வீழ்ந்து
பரத்தின் சுவையொப்பாய் மெடில்வாங்கினல்
பாய்ந்தவீறினி லுகப்பிலாவோம்
தரத்திலவனுக்கே நாமுழைத்து
தணுவாய்ச்செய்விக்கக் கடமையாவோம்
ஷாத்தினுயிரில்லா கரப்புதினம்
சதாகால் நீவிக்க வருவோமென்றூர் (79)

வலுவார் துன்பத்தை மறைப்பேனென்று வல்லாகூள அசமுக்காமின்னன்
ருசென்றூர்
வலுவுந்தனுக்குணஞ் செரியும்றப்பு வகுத்தமறையதி லுறுகிசொன்னுன்
ஒலுவாய் வெளியாகும் புதினந்தன்னை உகக்கான் ஜாகிலாய்முசிரிக்காவான்
வலுவாயுணர்ந்தவர் பொருளறியும் நவத்தை நமக்காதி தருவானென்றூர்

தீனிலாகாத குபிரேர்களைத்
தீநகரினி லளிப்பே னென்றூன்
மானிற்பிணேகின்ற நம்மிறகுல்
மறையிலுணர்வார்க்கு பலனுரைத்தார்
கானில் நபிகிளை தவனமுறக்
கலங்கிநொந்ததிற் கரப்புதினம்
நானிலத்தினர் இகழ்வாரெனில்
நபியிலுகப்புறங் கூர்மையென்றூர் (81)

சேர்ந்த குழுவினர் மனமுறிவாய்ச் சிந்தைக் கபத்தமாய்க்கலிபிலியாய்
நேர்ந்த முறைமைக்குவி ரோதஞ்செய்து நீதியாவுக்கு மறுப்புறினும்
சார்ந்தகுணமாக முஹர்றந் தோன்றில் சார்ந்த குழுவினர் வெறுப்பகற்ற
காந்தத்துணையாகுங் கரமதனைக்களிப்பாய் மகிழ்ந்ததாய்மதிப்போமென்றூர்

கெலிப்பாய்த் திக்குண்டந் தாண்டிவந்து
கிங்கிணுக்கினை மாற்றிக்கொண்டால்
சலிககக் கழற்றிய மங்கையொப்பாய்
சார்ந்து சுகம்வேறு பகைமூளைத்தால்
பலிக்கு முன்னமே நாமெதிர்த்துப்
பதியாமரசினில் முறையிடுவோம்
களிக்கப் பெற்றிடுங் கரத்தினமல்
காண்பார் புகழ்மணி யறிவீரென்றூர் (83)

கோவினுடராற் குடிகள்யாருங் குழுமியவரவர் நினைவின்படி
பாவியாகினேனென்றயர்ந்தார் பதியினுடரை யேந்தவர்கள்
ஆவிமடியினும் பிடியிழக்கோம் ஆருந்தடுக்கினும் வெறுக்கோமென்று
நாவினுறையத்தில் நொந்தோர்காண நடந்தபுதினத்தின் செய்கைபாரீர்

இருவர் சபதங்கள் இவ்வாறிலாக
இராஜன் வெளியாகித் தாவாக்காண
வருவீர் ஜல்தியா யன்விலாக
வருத்த சுரவழி நிலையிருத்த
தருணமிதுவென்று முரசறைந்து
தளங்கள் சூழ்ந்திடக் கோனெழுந்து
திருணயந்தாங்குமிடந்தனிலே
நீதி சுல்தானுங் கொலுவமைந்தார் (85)

தடுத்தபத்துவாக் கொடுத்தோரெல்லாம் தலைவன்முகமெதிர் நிறைந்துவிட்
டுடுக்கள்கூட்டம்போலினத்தாருடன்வரைந்த ஆடரைநிறைவேற்றிட [டார்
விதித்தஆடரில் கரந்தாழ்ந்திட விலக்காயதனையே தடுப்போமென்று [தார்
அடுத்தபகையோர்கள் கோவினைப்பாய் அனலின்றுயர்காண நிறைந்திருந்

துனியாத்தீங்கெல்லா மொன்றேயொத்து
தோஷப்பெருந்தனல் பற்றிநூர்ந்து
கனியாய் முதிர்பழச்சுவை கல்லாக
காண்பார் மனமெல்லாங் கசிந்துருக
ஜனியாய்மூடிய குழந்தைக்காகச்
சஞ்சலப்பட்டு நோவாரென்று
முனிவாயிறக்கியதனற் குண்டத்தில்
மூழ்கவருங்காக்ஷி பார்க்கநின்றார் (87)

துனியாஜனானற் காக்ஷிகாண ஜொலிக்குந்தீன் நிறம்பியகூட்டத்தார் [பாய்
ஜனியாயிருப்பவன் குஸ்த்திசெய்ய ஜனையைப்பொருந்திடும் பலனினைப்
முனிவாயிறங்கியகஹர்நோயினில் மூழ்கிமாளாமற்ஜெயிப்பேமென்று [ரீர்
கனியால் மோகித்தோர்வரும்பேரொப்பாய் கடக்குங்குழுவினர் வந்தார்பா

வேந்தர் பகைவெல்லும் வலுவினைப்பாய்
வேட்டையாடுவோர் துணிவினைப்பாய்
மாந்தர்விவகாரஹிக்குமத் தொப்பாய்
மலடிஜெனிப்பித்த சிசுவினைப்பாய்
காந்தமிரும்பினை யிழுப்பதொப்பாய்
கவிமாவுயிரேந்து மூமினைப்பாய்
சாந்தகுணமுள்ளார் சக்கதற்றி
சமைந்ததனல் தாண்ட வந்தார்பாரீர் (89)

பக்கீர்பயிருக்கி புலிவேசமாய்ப் பலரும் பலபல வடிவம்பூண்டு
சக்குருய்வாத்தியமதற் கிணங்கச் சுகிர்ததொனி யோங்கயிராகம் பூட்டி
சக்கொன்றமையாது ஹுஸைனைப்போற்றிசார்ந்தகுழுவினர் யாவர்களும்
பக்கத்தொனி தோன்ற அனற்குண்டத்திற் பாயுஞ்ஜெதுப்பே நிலமாய்
[வந்தார்

தீங்கார்தம்மையே வதைப்பாயல்லாற்
றினமும்பணிவாரை நோகச்செய்யாய்
பாங்காய்வளர்கின்ற நல்லோர்களைப்
பழிப்பாய்த் தூஷிக்கநீ பொருக்காய்
வாங்காச்செய்கை யிலெதுநேரினும்
வரமாயணு வரைத்தீதுவிடாய்
நாங்கள் யாவருமுனக்கடிமை
நபியின்கிளை நவர்தருவாயென்றார் (91)

இருளன் குலமாற்ற யிபுருஹீம்நபிக் கிட்டஅனற் குண்டஞ்சோலையாக
குருவாய்த்துலங்கிய ஹக்கேயின் றஹுஸைனினு மத்தைகாத்திலாக்க
தருவாயனலினை ஜசினைப்பாய்த் தணித்துச் சினமாற்றி குளிர்மைபொங்க
கருவாய்க்கரமூழந் தொனியிலாகக்கார்ப்பாயென விண்டு கனலிற்பாய்ந்தார்

புலியின் ரூபமாய் மையாலெழுதி
பொருமைகொண்டவன் சிந்தைகொல்ல
புலியினவதாரக் கரப்புதினம்
புன்மையாளர் களுணர்ந்துறிய
புலியாய்ப் பூஷிப்போன் புலியைப்போல
பொருதலார் பகைதனையழிக்க
புலியாயவ்தாரங் கொண்டோமென்று
புகையுமனற் குண்டந்தன்னிற் பாய்ந்தார் (93)

இருவரொன்றித்து சல்சல் லென்ன இணங்கும்பெண்ணுனும் ஜதையிலாக
ஒருவர்பின்மூடிமற்றொருவர் கையில்ஒங்காரத்தொனிகின்னரங்கொட்ட[ம்
கருவாயுற்பித்தவுஸைனினுமம் கைப்பாயுணராது சுவையாய்க்கொண்டோ
வருவாயிதுவேளை கார்ப்பாயென்றுவணர்ந்த தீக்குண்டர்தன்னில்பாய்ந்தார்

கோடாங்கி வேஷமுடிப்பணிந்து
குணமாய் காத்திடுங் குதரத்தோனே
கோடாங்கி தாங்குஞ்சிற்றுடுக்கு
கொடுக்கும் கலகலாவெனு மோசையை
கோடாபயல்களை சிங்கங்கொல்ல
கொடியகானேகி மடிந்தொற்றார்
கோடாங்கிவேஷமுற்று ஷைதயமானோம்
உசைனே கார்த்திடென்றனலிற் பாய்ந்தார் (95)

இஸ்த்திதாங்கிய பைருக்கிவேஷந் கிருபையுகக்காத ஹருமியர்கள்
இஸ்த்தி செலுத்திய கிருஷிகர்கள் கெதியாம் மழையற்ற பலனிலாக
இஸ்த்திதாங்கியது ரவிகளின் கிருபைப் பேர்தாங்கும் கரப்புதினம்
இஸ்த்தியோகத்தை பகைத்தார் நாண கெம்பீரமாகவே கனலிற் பாய்ந்தார்

நரகங் கெதியாக விதித்த தொப்பாய்
நல்ல மகவெல்லாம் எக்கினினுண்மை
பரக்கத்தமைவதாய் கல்புருகி
பஞ்சக்ஷா மகத்துவ நாமந்தோன்ற
விரதம் பூண்டதோர் தவம்விளங்க
விரைவாய் ஹஷ தொன்று மமைந்திடாமல்
நரகஞ் சுவனமாய்த் தருவானென்று
நாடிப்பாய்ந்தது னுண்மை பாரீர் (97)

தெளிந்த குளமொன்று பனிநீராகத் தெப்பங்கட்டிய தன்மை யொப்பாய்
பளிங்கு மண்டபச்சுனையும் நல்ல பாங்காம் மலர் செடி தருவினைப்பாய்
விழியால் மனத்தினற் றுன்புருது வியப்பாய் மகிழ்ந்தோங்க அனல் தணிந்து
களிப்பாய்ச்சிறந்ததைக் கண்டறிந்து கரத்தினனர்தசுக் கூறுசெய்தார்

ஜன்னி மூடியோன்றி யங்குங்காலம்
சாது வொருவனின்து ஆப்பேறினல்
நன்னய முறக்குதித்தெழும்பி
நஞ்சாய் மகித்த தின்றியக்கம்விட்டு
கன்னற் படுத்திய பிணிநோவெல்லாங்
கட்டோட கன்றிடச் செயும் பலனய்
மின்னல் கண்டவன் பலனினைப்பாய்
விளைந்த தீக்குண்ட மகிமை கண்டார் (99)

சொல்லுங் கங்கிபாற் குழிநிறம்ப குவிந்த தனலினிற் பாய்ந்திருந்து
நல்ல மரங்களின் கனிபுஷ்பம்போல், நவமாயனலினை யெடுத்தெறிந்தார்
எல்லை சூழ்ந்தவர் நவங்கண்டிட. யெல்லாங் கரந்தரும் புதினமென்று
புல்லர் மனமெல்லாங் கசிந்துருகப் புகழாயனலினிற் புனலாடினர்

பாலர் யாவருமொன்றிப்பாகிப்
பழகுங் கூட்டத்தின் றெனிதுலங்க
பால ருஹப்புறம் பால்யஷபை
பலனினுயிர் காணுங் கரப்புதினம்
பாலர் தினகாலந் துதி செலுத்த
பதியினுடலரைக் கெலித்தோமென்று
பாலர் சிங்கமாயருக்க னைப்பாய்
பாய்ந்து கரையினில் வெளியேறினர் (101)

சித்தம் பாத்திஹாத றாது யாசீன், கண்மணி உவைஷன் பெயர்க்கதியாச் [செய்ய
சித்த மூவப்பானோர் சுவையமைய, செய்யும் பிரியாணி குறமாத்தினி
பத்து நாள் வரைத்தனித்தனியே, பானக்கரசுவை யெவருங்கொள்ள
உத்தமமாகச் செயும் பலனில், உண்மைகண்டதாய் வெளியேறினார்

செப்பை வணக்கமுமிதற்கீடல்ல
லாட்ரிப் பிரைசதும் பலன் றாது
மப்பு யோகத்திற் சுகமிராது
மாந்த்ரத் தொழில் யாவும் கனமுறாது
நட்ப்புக்கிழிவாகுந் தரீக்கு யாவும்
நல்ல பலனொற்ற கனிகொடாது
அப்புந்துறைவழிக் கரப்புதினம்
அறிந்தோமறிந்தோ மென்றக் கரையேறினார் (103)

பிணியாலுபத்ரவம் ஐயூபுநபிபெற்ற காலத்தில் சுகப்பேறுக [மல்
துணிவாயதனையே புகழ்ந்த தொப்பாய்த் துலங்குந்தனல் வீறுற்றன்புறு
மணியாய் மனுபுரம்புகழ்ந்து காணமதிக்கா ஷபையினர் வெருண்டோடிட
அணியின் கூர்மையை யரசறிந்து ஆடர் முடிந்ததா யதிசயித்தார்

அர்சரநேகமாயி சுலாமானார்
அநேக நூலறிந்தோருமானார்
அரசிற் பதிவான தனவந்தர்கள்
அநேகர் கூடியேயடி பணிந்தார்
அரசில் வருங்காலம் கவங்களெல்லாம்
அபூஜகில் மனமொவ்வவில்லை
அரசில் விரிவான பலனுணர்ந்தோம்
அயர்ந்த கரமெங்கும் ழைத்ததென்றார் (105)

கும்மலிசுலாமின் மஸ்ஜிதினில் கொடுங்கா பீரிசுலாமைப் பொருந்திவாழ
ஜும்மா நாளன்று குழுவாருடன் சுகிர்தநாளிதாய்ப் பாசமுற்று
ஜும்மா நாளன்றே கலிமாக்காணச் சுகமாய்ப் பர்ம்வாழ நாங்களானோம்
உம்மாலெவர்களும் உரைமொழியை உண்மையாகவே தருவீரென்றார்

அறிவையுணராமல் மஸ்ஜிதிலாகி
அறியக்கேட்டதோர் ஆடருக்கு
குறியாய் ஹக்கிக்கத்தி னுள்ளமையை
கூறிடாமலே நசறுக்களும்
தரியார் நூலாட்டக் கொள்கைபோல
தாங்கள் தாங்களே வெருப்புவுற்று
விரிவாயுரை யாதவ்வாதியானோர்
விரைவாய வரவா கன்றாரன்றே (107)

தலைவன்மொழிந்த தோராட ரினைத், தாங்கும் பேர்தாங்க எதிரியாரும்
விலையிலிது பெருந்தனமா பெண்ணை விலைக்கு வாங்கா ரென்றவர் மதித்து
கொலையாய்ச் சமைந்த அவ்வாடரினை கொண்டார் சிந்தையில் அதில்முளைக்க
விளையாய்க் குவிந்திடும் பொருளறிந்து வேந்தன் வியப்புற்று மொழிந்தனரே

பட்டால் சுத்திய கரமுழத்தைப்
பகைத்தாரகன்ற பின்தானெடுக்க
தொட்டாரதனையே அவிழ்த்துப்பார்க்க
துலக்க முறுங்கரந்தங்கமாக
பட்டாரிருதயத் தொழும்பலன் போல்
பழபழப்பாக மினுங்கக்கண்டு
விட்டார் தீங்கன்றி விளைந்த நவம்
வீறாய் விளைந்ததாய்க் கண்டேனென்றார் (109)

ஹறாமென்றிடு மார்க்க விலக்க தனில், ஹலாலாயுதவிடும் விதியுற்றதால்
ஹறாமின் றனிக் குணந் தெரிந்தறியான் ஹக்கீமாய் நீளினும் ஆட் கொல்
[லுவான்
ஹறாமின் செய்கையாய்ச் சிருக்கமைய ஹஷதார்கணித்திடும் நீதிமுறை
ஹறாமை நீக்கியமைய மறிய ஹலாலின் வெளிச்சமாயறிந்தேனென்றார்

மதுவு மங்கையும் ஹறாமிலாக
மாற்றாலது ரண்டும் ஹலாலானது
மதுவாய் விலக்கென்று பொறாமை கொண்டார்
மார்க்கமுணராத ஜாஹிலானார்
மதுவின் வீறினை மஸ்த்தாய்க் கொள்ள
மஸ்த்தானாகிய தவம் பெற்றது
மதுவாய் வெளியான கரப்பு தினம்
மார்க்க பஞ்க்ஷா வாய்த்தழைத்ததென்றார் (111)

சிருநீர் பாலாக மாறிடினுஞ் சீழிற்சுவைகாணப் பணிமாறினும்
தருவிற்குலமாறப் பிரித்திடினுஞ் சமையுந்துன்பத்திற் சுகமேற்றினும்
கருவிற் பெண்ணினை யாணாக்கினும். சாளையதனையே பெண்ணாக்கினும்
மருவாயுணராமற் குணம்பொருந்த மதியில் யாவர்க்கும் விதியாமென்றார்

கள்ளுமதுவாக மாறிடினுங்
கஞ்சாகலர் மாறிசுவையுறினும்
கள்ளனபிதாய் மதிப்புறினுங்
கைப்பு இனிப்பாகத் தெளிந்திடினும்
பிள்ளைகுலமாறி தழுக்குறினும்
புலமை புலையனிலூன்றிடினும்
வள்ளல் புதினமாயிவை தோன்றினால்
வணங்கயாவர்க்கும் விதியாமென்றார் (113)

தொழுகைவிரதமும் சதக்கா ஹஜ்ஜி துலங்கும்பலன் யாவுந்தெரியும்பேர்கள்
தொழுகை முன்னன கலிமாவிலே துலங்கும் தீனிற்சேர்ப்பாரிடமறிந்து
தொழுகுந் தலமதைத்தனிற் காணுமல் தொடராய்த்தீன் தீனெனுஞ்சத்தம்
கழுதை யொப்பவர் பொருமைசென்னூர் காஃபிரவகரங்கண் [செய்வோர்
[டேனென்றூர்

மடிந்துவுயிரது தோன்றுமுன்னர்
மரித்தபின்னரே புதினந்தோன்ற
படியிற்கண்ட வரிருதயத்திற்
பலனுமுத்தியாயு திக்கக்கண்டு
முடிவாய் பணியாமல் நிந்தைசெய்தால்
முன்னேனுனூர்காத பாவமென்று
அடியார் யாவருங்கண்டுதொழ
அனுதி மொழிந்ததினுறுதி யென்றூர் (115)

தெத்தால் நவம்தை நிந்தை சொன்னூற். நிருந்தாபவத்தினுல் நரகாளுவான்
உத்தமமான மறைப்பு தினம், உள்ளாரறிந்ததை யிகழ்ச்சியுற்றூல்
சுத்தம் வெருத்ததோர் ஜாகிலாகி, தூயமாஹான்களின் மூனிவிலாவான்
சத்தம் யாசகம் துதிவாங்கிட கனகப் பஞ்சூாவுந் தழைத்ததென்றூர்

விரதம் வைத்தவன் சபதம் வரை
விளக்கிற் கரம் நீட்ட மனம் பொருக்கான்
மரத்தினுயரேறித் தலைகீழாக
மதிக்க விழுந்தவன் தியாகம் வாங்கான்
தாரத்திற் குன்னலாய்ச் சமையுங்காலர்
தாசனு கிடான் தீங்கிற்குந்த
கரத்தினுவப்பினுற் கனலிலானுர்
கண்ட நவமதைவியந்தே னென்றூர் (117)

புத்தாய் விளங்காமல் வளர்ந்திடாமல் புதினந்தாங்காத கிறீஸ்துவினில்
ருத்தம் பொருந்திட மாதா சபைக்குழுவின் கொள்கையாய்ச் சிலை வளர
சித்தப்பொருத்தமாய்த் தினகாலமுஞ் சிலையைத்துதிக்கிறூர்கார்க்குமென்று
நித்தம் துதித்தாடும் ஹுஸைனின் கரம், நீதருவப்பதாய் மதித்தே னென்
[றூர்

பொலியும் பூசையுஞ் சிரத்துதியும்
பொங்கற் பேருரு கரப்பு தினம்
களிக்கத் துலங்கிய விந்ததனை
காலகாலமும் கிளை துதியாய்
மலிவாய்நாடெல்லாம் செழிப்பிலாக
மக்கா முஹம்மது உவப்பாய் நிற்க
புலியின் மகவான உஸைனின் கரம்
புதின மதுவே நற்புதினமென்றூர் (119

சங்கைநபி யுல்லாதிருமகளைத் தழைக்க மணஞ்செய்த புகழலியின்
சங்கை மக்களிலுயர்பதியார், சகலமனுவார்க்கு முயர் நிதியார்
சங்கைப்பேருன்ற மரித்து மண்ணிற் சதமாயடங்காமல் விண்ணேகினார்
சங்கைமகன் றதி நிந்திப்பவன் சந்தேக முறுங்காபிரென்றார்

கொடுத்த பத்துவாவில் லெப்பை ஆலீம்
கூர்மையாகவே வரைத்த மொழி
அடுத்துப் பார்க்கவே அகன்றார் வாது
அஜாசிலுருவான மகவாய்க்கண்டேன்
தொடுத்த பகைஞர்களெடுத்த சரந்
துன்பமாகவே யிகழ்ந்தழிந்தார்
உடைத்த கரவழிப்பு தினநேர்மை
உலகிலெவரிலு மில்லையென்றார் (121)

பட்டு வுடுத்தவே நபியிடமாய்ப் பரிந்துகேட்டதின் விளைபலனாய்
வெட்டால் மடிந்ததாய் வியப்புற்றனன் வீரப்புலிமகன் செல்வரென
சுட்டால் முளையாத கட்டையாகித் துலக்கமுறவே நற்பழங்கன்றதாய்
திட்டமது நாளும் யாவரிலுந் தின்னுமருஞ்சுவைக் கனியீதென்றார்

வடிவு பொருந்திய முஹூர்றமாதம்
வழங்குப் பிறைகாணில் தொழில்நிறுத்தி
அடியார் நபிகிளையனைவோர்களும்
அன்பாயுஷைன் வழி கரப்புதினம்
முடிவாய் நிறைவேறுங்காலம் வரை
முறணாய்ப் பகையாமலிருப்பவரின்
அடியாய்த்து திப்பாரிலுள்ள பலன்
துனியாப்பலனிலும் பெரிதாமென்றார் (123)

கசுருல்லசுவது கல்லை முத்த கண்டபவமெல்லாந் தொலையுமென்று
பிசுமிலுதையமாய் நின்ற ஹக்கு பெரியாரு கந்திட மதியமைத்தான்
துசமன் கிளைமாற்ற நற்றினெழும்பத் துலங்கு முஷைனுமம் நிந்தைவைத்
மிசுறுப்பதியினை ஸ்ரீதனமாய் வேந்தரிடம் பெற்றோர் மகனுமென்றார் [தார்

முன்னாளகியானிலிருந்த அலி
மோசனிபுலீசின் முதிய மகன்
தன்னின் கொடுமை யாலரசு செய்ய
தரணி நடுங்கிய காலத்தினில்
வின்ன முறும்படி பெரும் விரலை
வீறுங்குணம் யாவும் தணியும்படி
மன்னன் காமாவைக் கட்டிவைத்த
மகிமை தவப்பலக்கனி யீதென்றார் (125)

வருட வருடமாயுவைஷன் பஞ்சாவை நவமாய் நிருத்தியே துதிப்பவரின்
கருணைக்கு முவாரில் யானுமொன்ருய் கால காலமுந் துதியாய்வர
தருவாய் முளைத்தாரின் துவாப்பேருக தத்வவீரியம் அரசுதாங்க[னென்ருர்
குருவாய் மதித்தின்றே யானுமொத்தேன் குதாமேலாணையாய் நவின்றே

துனியாவெனுஞ் ஜெமல்பாரந்தாங்கி
தொலையாயேகுங் கால்நீளும்வரை
துணியாவெனுமாது கற்பமுற்று
துலங்குமகவழி பெறுங்கால்வரை
துனியா வெனுஞ்சோங்கு பிறழும்வரை
துலங்குஞ் சந்திரனருக்கன்வரை
துனியாக்காரண முவைஷனின் நவம்
துலங்கும் நபியாணை நடக்குமென்ருர் (127)

உவப்பா ருஹப்பதில் நானீயென்ருர் உவைஷனை யுஹப்பது இருபையென்ருர்
உவப்பால் நபிமகள் பெற்ற கனி உண்ணவுண்ணவே சுவைமாருது
உவப்பாற் பெருகிய அலியின்மணி உள்ளார் தொழும் பலன் காணுஞ் சுவை
உவப்பாய் நடந்தேறப் பிரியமுற்றேன் உண்மைக் கலாமினை நவின்றே
[னென்ருர்

ஹாஜ்ஜத்தாகவே மொழியவில்லை
குரு ஆண்பேரிலு மாணை சொன்னேன்
ஹாஜ்ஜத்தாகியோன் வெருப்பிலுற்ருல்
குதா வினுக்கினைச் சுமந்தழிவான்
ஹஜ்ஜால் வருங்காலம் வரும் நாள்வரை
கனகப்பஞ்சாவாக வளரும்நாளும்
ஹஜ்ஜத்து நேரப் பலனிஞனை
காத்திலுவப்பாரில் மொழிந்தே னென்ருர் (129)

உன்னை யுகப்பானை யானுகப்பேன் உண்மையுணர்ந்தவர் தீனிலாவார்
என்னைப் புகழ்ந்தவனுமை மறந்தால் எத்தனைக்கோடி தவம்புரியின்
குன்னும் வேதனை நரகிலிட்டுக் கொன்றே யழிப்பதாய் நவின்றுனதி
மன்னனுகப்புற்ற கரப்புதினம் மாக்கள் மாக்களாய்த் துதிப்பாரென்ருர்

விடுவார் தொழுவாரில் விளைபுதினம்
வெருவாய்ப் புகழ்வாரில் மதிதோன்றிஞல்
படுவார் சிந்தித்த கோரம் முத்தி
பயகாம்பர் பேரர் சிங்கமாவார்
வடுவாய்த்,தோன்ருது நவம் விளங்க
வஞ்சகச் செயலுடல் மாற்றியே
தொடுவார்தம்மிலே யானுமொன்ருய்
தொடுத்தஆடரை விடுத்தேனென்ருர் (131)

சக்கால் நிறம்பிய இனத்தவர்கள் ஷருதார் மொழிந்ததினுண்மை கேட்டு
உக்காமற் பஞ்ஷா சதா காலமும் ஊக்கத்துடனுக மனுச்செய்தனன்
துக்கமுகமாக நேர்ந்ததென்று சொன்ன தீர்ப்புணர்ந்தயர்ந்த கன்றூர்
பக்கம் நின்றவர் புகழிலாகிப் பஞ்சூஷாப் பரக்கத்தால் நவின்றகன்றூர்

பஞ்சூஷாவைப்பது பாவமல்ல
பாவங்கோபமென்றறிவார் சொல்வார்
வஞ்சமுறுபவன் புதினம்பாரான்
வறுமைநிறம்பியோன் அயர்ந்துறங்கான்
தஞ்சப்படுவோரிற் செல்வர்தோன்ற
தலைமைபுகழாகில் நறையில் நாடான்
நஞ்சாற்றீங்குற நவின்றவழி
நாளும்பகையென மதித்தகன்றூர் (133)

துலங்கும் பஞ்சூஷாவி லிவ்வாறிருக்கத் தோஷக்குபிர் நோயாய் மதிதுலக்கி
நலங்கள் சொரிந்திடும் நபிகிளையை நஞ்சாய்ப் பொருமையாய் மதித்தகற்றி
தலங்கள் யாவிலுந் துலக்குங்கரம் தத்துவமுறும் உஷைனின்வலு
பிலன்றூன றமென்று நிந்திப்பவன் பீராய் முழக்கினுங் குருடனுவான்

தொழுவார் பலனெனப்பாய்ச் சிறப்பிலாக
துதித்தாரறிந்திடுந் திரவியமாய்
உழுதாருவப்புறுங்கிருஷிகமாய்
உகந்தார் மகிழ்கின்ற நற்கதியாய்
பழுதாரறியாத பொழுதாகவும்
பக்தியாளரின் ஜோதியாயும்
வழுவாற்றலங்காத பஞ்சூஷாக்கரம்
மகிழ்வாரறிவதின் பலனிதுவே (135)

சங்கை நபியுல்லா கிளையுகக்க சைய்யிதெனும் புலிதவமகவாய்
பங்கமொன்றில்லாப் பெருந்தவமாய் பாலர் பாலியர் புகழ் கனியாய்
சிங்க உருவமாய்க் கரந்துதிக்க ஜெகத்தாருள்ளமைப் பொக்கிஷமாய்
தங்கும் நாடெங்குஞ் சிறப்பமைய தழைக்கும் பஞ்சூஷாவின் ஆகம்பாரீர்

கற்பினரசியாம் பாத்திமுத்து
கண்ணின் மணியாகவு தித்தமகன்
நற்புகழ் கொள்ளவந்த வித்து
நல்லார் துதிகொள்ள தெரிந்தகனி
அற்பக்குண முள்ளாரி ருதயத்தில்
அலட்டாய்த்துன்பிக்கும் பெரும் பகையார்
கற்பகத்தருதனை யெவனும்
ஹறுமாய் நவின்றிடில் முசிரிக்காவான் (137)

149423

உம்மத்தாகிய கிளைஞர்களில் இன்னஹாதிஹி உம்மத்தியென்றான்
எம்மில் வருபவன் நீணிலாகி யெழும்புங் கலாத்தில் முசிலீமென்றான்
தம்மல்வரும் நேரம் உணருந்தவம் துலங்கான் யாவனுங் காபிரென்றான்
நம்பு மார்க்கத்தின் நடையிதுவாம் நகைத்தார் பஞ்க்ஷாவை யுகப்பார்பாரீர்

அடியார் புவியினில் செய்யும் அமல்
அழியாது கப்புறுந் தீனின்வலு
படியிலுணராது பொருமை வைத்து
பஞ்க்ஷா வழியினில் ஹசதுவைத்து
துடியாய் மினுங்கிடுந் தவமிழந்து
தீனிஞெழுக்கத்தை கெடமறந்து
விடிவாய் வரும்பேறு உணர்ந்திடாது
விழலாய்ப் பஞ்க்ஷாவை யிகழ்தார் பாரீர் (139)

வருடம் வருடமாய்க் கிறீஸ்த்தவர்கள் வலிய ஜேசுவை யூதரசு
கருட பட்சியாய்ப் பறந்தடிக்க கழுவிலேற்றிய கோரப்பலன்
பெருகும் பாவத்தைப் போக்கவேணடி பிறந்து யிறந்ததாய்ப் பூஷிக்கின்றார்
உருகும் பேர்க்கிது விழலாயில்லை உலகிலரசரும் எந்தார் பாரீர்

ஷங்கை முஹர்றத்திற்றன முள்ளவர்
தம்பால் வருமேழைக்கு பசரித்தால்
ஷங்கைப்பேர்பெற்று வாழ்வாரின்னும்
ஜகத்தில்வருமிடர் தொலையுமென்று
ஷங்கைப்பாடமாய் நம்மறை நீதியில்
சார்ந்தாரறிந்திட விதியிருக்க
ஷங்கை நபியுல்லா உவப்பானதை
தவிர்ப்பார் நரகினில் அழிவார் பாரீர் (141)

மச்சவகையிலும் நமக்கு ஹறாம் நாற்கால் விலங்கிலும் நமக்குஹறாம்
இச்சைமயலிலும் நமக்குஹறாம் இன்னுமிருகப்பாலநேகம்ஹறாம்
பிச்சையேற்பதும் நமக்குஹறாம் பேசுஞ்சொற்களிலநேகம்ஹறாம் [பாரீர்
கிச்சைக் குணங்கொண்டு குபிராகாமல் தெளிவாய் பஞ்க்ஷாவைக் கூர்ந்து

உருத்தாய் முஹம்மது மறைமொழியில்
உதிக்குமெய்யறி வெதுதானென்று
கருத்தில் மதியினை ஒடுக்கிவைத்து
கலிமாக் காண்பதில் சிர்றமைத்து
ஷருத்தாலதின் மூளைக்காகுங்கரு
ஜகத்திலெதுவென்று அறிந்துகொண்டு
நிறுத்துப் பார்க்காமற் குபிரிலாகி
நேர்மையழியாது பஞ்க்ஷாவைப்பாரீர் (143)

இசுலாமெனும் வேஷங் கட்டிக்கொண்டு இறங்கும் வீதியில் மேளங்கொட்ட
திசுபன் கண்டதிர் காரையூச தூய தீனென்றதின் பின்னூழ்ந்திடுவோர்
கசுபிலுதிக்காத கலிமாவென்றால் ஹபீபையுகக்காத முனுபிக்காவான்
இசுமூலகுலத்தின் காக்ஷிகாண இமாமின் பஞ்சாவின் ஆகம்பாரீர்

அணியாச்சுவை யாவுங்கடுப்பெடாது
தொடுக்குஞ் சுகம்யாவுஞ் ஜனிமாற்றாது
கனிகள்பல கோடிகுவிந்திடினும்
கலிமாத்தொட ரொன்றின்முன்னுரூது
ஜனியினபகாரந் தோன்றுங்காலஞ்
ஜட்சியாயினுங் கீழாகுவான்
முனிவாய் வருங்கொள்கை யாவும்போக்க
முத்திப் பஞ்சாவிலுகப்பாம்பாரீர் (145)

படித்துத் தெளியாத யோகந்தன்னை பரமனிடமாக மிகுரூஜிற்பெற்ற
முடித்தபேர் தொனிகலாமி சுலாம் மூமினுகிட முறைமைசொல்லி
துடித்த மீமுறைத்தீன் வழியை தூயதீனங்கமாய்ச் சமைத்து
நடித்துக் காண்பித்த செய்கைகண்டு நயனபலனுற்ற பஞ்சாவைப்பாரீர்

தீங்காய்ப் பஞ்சாவின் முறைமை காண்போன்
தெளிந்தோனுகிலுங் குருடனுவான்
தீங்காய்ப் பஞ்சாவை நிந்தித்தவன்
செம்மலாகினுமு னுபிக்காவான்
தீங்காய்ப் பஞ்சாவை முனிந்து நிற்போன்
செல்வந்துகளாக அகன்றழியும்
தீங்காய் மதியாமல் விசுவாசித்து
தீனின் பலன் பெறப் பஞ்சாப் பாரீர் (147)

மாணிக்கக் கொம்பினுடையகனி மதிக்கொணுயோகத்தின் கீர்த்திமணி
கர்ணிக்கை வாங்க பிறந்த ஒலி கல்லாற் புகழ்வாரின் கமழ்சுவையாம்
பூணிப்பாகவே தொழுவார்களில் புகழ்சேர் மந்த்ரமாய் முழங்கும் பலன்
ஆணெனுருவான சிங்கக்கொடி அழகாம் பஞ்சாவின் ஆகம்பாரீர்

கலிமாத்தொழுகையின் நிலைகாணுமற்
கல்விமகத்துவக் கிரீடந்தாங்கி
புலியாய் வந்தெதிர் மோதிடினும்
பொஅலாவெனும் பாடல்வலு வொன்றினுல்
ஒலியாய்க் கிளம்பினுந் தடுப்போமென்று
ஒலுவாம் பஞ்சாவிலுகப் பிழந்தால்
பலியாமுங்களின் செல்வந் தோர்ப்பீர்
பதையாதறிவோடும் பஞ்சாவைப்பாரீர் (149)

ஜட்சி முன்னெதிர் வாதிட்டவன் சபையை மதியாது வெருண்டோடினான்
கட்சி முடிவினைக் கண்டறியான் கலக்கவலுவற்ற நேரொப்பவன்
இக்ஷிப்புறும் ரசம்யின்னதெனும் இயல்பையுணர்ந்திடான் சொல்லுமொழி
பக்ஷிக்கப்படும் நிந்தையல்லால் பலனிலாகாது பஞ்க்ஷாவைப்பாரீர்

அறிவிற் சிறத்தவன் அத்திப்பாகன்
அவனில் மதியூகிகம் மாறனும்
பிரிவில் விரிவானோன் கங்காணியும்
பெரிய வகுப்புற்றனாட்டாமையும்
சரியாயுயர் வானபுச்சரொடு
சதாகால் மச்சத்தின் வர்த்தகனும்
புரியுந்தலாலுஞ் சினங்கெதிர்க்காற்
பெரிய கோனிலுமடங்கான் பாரீர் (151)

கச்சவடஞ்செய்து கரைகாணாதோன் கடலின்பொழி முகத்திறங்குவோனும்
மச்சம் பிடிப்பவன் சமர்செய்வோனும் மாந்த்ரமறியாது மகடிசெய்வோன்
அச்சம் பிடித்தவன் பேயோட்டுவோன் அரவமாட்டியே பிழைப்பவனும்
துக்ஷணாடும் பந்தாட்டமாய் துண்புற்றழிவாவான் பஞ்க்ஷாவைப்பாரீர்

கற்றபடி நாட்டங் தெரிந்து தொழான்
கரடியுடன் பேசித் திரிவதொப்பாம்
குற்றம் வருஞ்செயல் தெரிந்திடாத
குருடனுடன்பேசி நதிதாண்டினோன்
சுற்றந்தெரியாமற் புடமூடினோன்
சுருதியறியாத ஜாகிலொப்பாம்
கற்றோர் சாபத்திற் சொக்கிடாமல்
கண்யமுறும் பஞ்சாவிலுகர்ந்து பாரீர் (153)

ஹக்கையுஹர்ந்தவன் நபிகிளையைஹறாமாய்பித்தனாவாய்நிந்தைகொள்ளான்
ஹக்கின்றிருத்தூதர் முஹம்மதியா கண்ணின்மணியான பாவுத்திரனை
ஹக்கிற்புகழாது பொறுமைகொண்டால் ஹன்றுசுதையமாய்ப் பவங்கள் [செய்வான்
ஹக்கினடிமையாயு திக்கப்பெற்றால் அருமைவுவைஷன் பஞ்சா தெளிவைப் [பாரீர்

நபாத்தாக்கோர் வையைப்பங்கமாக்க
நாடிமைய்யத்தை புரட்டிவைத்து
உபாத்தாய்ப்போன பின்மைய்யம் பார்க்க
உதித்த அரசனை வியர்தழைக்க
நபாத்தாக புறினில் கழுதைதோன்ற
நயந்தகோவினை சலிப்பாக்கினார்
உபாத்தாய்ப்போன நபாத்தாமொழி
ஊமைஊதிய சுரமாம் பாரீர் (155)

கொள்கை புரட்டிடும் இல்மாலிகள், குவலயந்தாங்கி சமந்திருப்பார்
கொள்கை விளங்காமல் அமலறிந்து, கொஞ்சு மோகத்திற் சபிப்புறுவார்
கொள்கையாவிலும் மாய்கைதோன்ற குருடனிபுலிசில் பணிந்திருப்பார்
கொள்கை விளங்காமல் மறுத்திகழ்ந்து, குபிரிலாகாமல் பஞ்சக்ஷாவைப்பாரீர்

சீமானிருத்திடுந்தனங் கோடியிற்
சேருந்துகை கூடிமலையாகினும்
ஈமானிடையூறும் அருள்மாவினில்
யீயுமணுப்பொடி நிகராகாது
காமாகுலத்துறுஞ் சீமான் றகை
கனத்திலுயர்வது யெதிலுமில்லை
ஈமானுறுதியாவானேரெல்லாம்
இயம்பும் பஞ்சக்ஷாவின் நுணுக்கம் பாரீர் (157)

வேஷமாறினேன் யோகியென்று, விவேகந்தேடினர் மஜ்னூனென்று
பாஷம் நீக்கினர்பேரின்பத்தில் பவுசை விரும்பினர் அமலுயர
வாஷ மேற்றினர் சுகமேயற்ற. வயதை நீட்டினர் கண்டந்தாண்ட
பாஷந்தாங்கிய கரப்புதினம் பாரிலிகழாமல் பஞ்சக்ஷாப்பாரீர்

மச்சத்தில் மச்சம் பகையாய்க் கொல்ல
மதிக்கா சமுத்திரந்தனில் வாழ்ந்திட
உச்ச மலையினில் மிருகங்களும்
உகப்பு மாற்றியே பகையாய்க்கொல்ல
பிச்சை வாங்கிடும் பைருக்கியும்
பெரிய பகைஞுய்ப் போர் முடிக்க
இச்சை யெதுவினிலுதையமென
யியம்பும் பஞ்சக்ஷாவிலுணர்ந்துபாரீர் (159)

புவியின் ஜனர்மெய்க்கச் சங்கைகாட்டி, புகழும் பெரியோர் போலாடை பூண்டு
புவிக்குக்சரும்பாக நூலறிந்து பொருமை நீக்காரில் பிரியம்வைத்து [து
புவியார் சினந்திடுந் தொழிலைச் செய்து பொல்லாப் பவச்சுமைதனைச் சுமந்
புவியார் நிந்திப்பில் நீபுமொற்றால், பொன்னூர் சுவனத்தை யிழப்பாய் [பாராய்

உமையாவெனுங் கப்பல் ஜெயித்த கொடி
உயர்வாய் விளங்கியே வரும் போதினில்
உமையாவுக் கபாயமாய்க் கறுபலாவில்
உதித்த சமர்யுத்தத்தியக்க காலம்
உமையாவுக் கபாயமாய்க் கரமுந்தோன்றி
ஊர்ச்சிதக் கொடிபகை மாற்றிட
உமையாக்குழுவினேரடி வணங்க
உதித்த பஞ்சக்ஷரவிலுகந்து பாரீர் (161)

மலரிற் கனர்தாங்கும் மலரதனில் மதியாய்ப் பூர்வமாய் நிலாவுதிக்க
மலரிற் காலூன்றந் தருவறிந்து. மகத்துவ முறுந்தீனரசில் [சரம்
மலரின் குணமெது செய்கையென்று. மறுமைப் பலன் காணத்தொடுக்குஞ்
மலரில் மலர்ந்திடும் மலரொன்ருக, மகிமை யறிபவன் பஞ்சாப்பாரீர்

கல்லாஞ்சிலையினிற் றெய்வமில்லை
கண்டாற்றுதிப்பதற்குறியசாமி
எல்லை மனுக்களிற் பிரகாசிக்க
யெந்த நாளினும் பூசை செய்ய
வல்வமை காணக்காவடியும்
வாகாய்க் கட்டியே பூஷிக்கின்ருர்
எல்லைக் கபத்தமாய் விடிர்தத்தெது
யியம்பும் பஞ்சாவை நினைந்துபாரீர் (163)

வடோச்சி போரினிலயர்ந்து நொந்து. வருவேனெனு மொழியுதவாதென்று
கடாச்சக்கதிகாண அலிமுரசை, சார்க்குஞ்சமையமே வருவீரென்று [ம்
படாத பாடெல்லாம் பட்டயர்ந்து. பகர்ந்த அலிமொழி முரசு கொட்ட
விடாதே யெதிரியைக் கொல்வேனென்று, விரைவாயிறங்கினோர் பஞ்சா
[வைப்பாரீர்

பதினந் தாங்கிய அலியின் கனி
புகழும் பயஹாம்பர் முத்தின்மணி
புதினக்க சுபதுங்கரு மத்துமே
புலியார் கண்டிடவுதித்த மறை
புதின விளக்கத்தைக் கண்டிடாமல்
பொருமை கொள்வாரை பிளக்குஞ் சிங்கம்
புதின மகத்துவ உசைன் காதலைப்
பொருந்துவோர் பலன் சுவனம் பாரீர் (165)

ஜாதிமேலுள்ளான் பிணியால்வாட. சமையஞ் சுகமுறச் செய்வோர்களில்
ஜாதியுயர் வில்லை சங்கையில்லை ஜல்தி சுகங்காட்டுபவனொருவன்
ஜாதி வீரனுயுயர்குலமாய் ஜகத்தார் மதிப்பது துரை ராஜென்று
ஜாதியாவிலுந்து திக்கவந்த சைய்யித வுலியா பஞ்சாப்பாரீர்

மூசா நபிக்கொரு மஸ்ஜீதில்லை
மொழிகள் யாவுந்தூர் சீனுவிலே
ஈசா நபிக்கொரு யிடமுமில்லை
இடரிலேறினர் பரம் வாழ்வென்று
ஆசா நிருத்திய சுலைமானபி
அழகு பதிக்குடியெதுவுமில்லை
கூசாதே பஞ்சாக்கரந்துதிக்க
கொண்டார் யாவர்க்குஞ்சுவனம் பாரீர் (167)

ஆகூஷிருந்திய நபாப்ரசில் அமையுங் கோனுக நம்மறையாளனுப்
ஆகூஷிநீதிமைச் செலுத்துங்காலம் அமைச்சாய் சைனியம் அமைந்திருக்க
ஆகூஷிக்குடிகளில் இசுலாமென்னும் அவனின்பூமியில் மஸ்ஜிதோங்க
ஆகூஷிசெய்தவர் மாறுங்காலம் அழகாய்மானீப மீந்தார் பாரீர்

கொண்டார் பஞ்சூாவைக்கன மருந்தாய்
கோக்கள் நிருத்தாமல் மானீபத்தை
கண்டார் மகிழ்ந்திடப் பெருந்துகைகள்
கால காலமும் நடைபெற்றொங்க
உண்டாய்ப் பூமிகள்விளை நிலங்கள்
தஆப்பேறுண்டாகச் செய்ததுயேன்?
விண்டார் தொழுங்காட்சி அதிலிருந்தால்
வீணுய்த் தூஷிப்போன் ஹறாமிபாரீர் (169)

படித்த ஆலிம்கள் அதிலில்லையா? பாரஉலமாக்கள் நிருத்தினரா?
படித்தாருயர்வான ஷம்சுல்லுலமா பாராதயர்ந்தாரா? கோவுக்கஞ்சி
படித்தபேரெல்லாஞ் சபைநிறைந்து பலுகும் ஆகூஷியாய்ப் பதிநடத்தி
படித்தார் யாவருந்துதித்த பஞ்சா பகையாய் மறப்பவன் புலையன்பாரீர்

மூக்கினழகுக் காய்ப்புலாக்குமிட்டு
முகத்தினழகுக் காய்க்காது குத்தி
நாக்கினழகுக் காய்க்கஷலமைத்து
நவினயின் புக்காயிராகம் பூட்டி
வாக்கினழகுக்காய்க் கருத்தமைத்து
வாலப்பிராயத்தார் கோஷாவென்று
பாக்கியமுள்ள நாட்டதிபன்
பஞ்சூாமானீ பஞ்செய்தார் பாரீர் (171)

முத்துநவரத்ன மிகைத்தபஞ்சூா முரிசிதுஹப்பான மக்காயின் பஞ்சூா
சித்துவெளியான மோகப்பஞ்சூா சிறந்ததோர் புகழ்காணுங்கனகப்பஞ்சூா
வித்துமுறையான சித்தின்பஞ்சூாவியப்பிற் சினர்தாரையறுக்கும் பஞ்சூா
சத்திலுறும் பஞ்சூா நிந்திப்பவன் சையிதாயினும் பாவிபாரீர்

மூஷாநபியேறும் வாகனமாம்
முதிர்ந்த வயதுள்ள கோவேறுகழுதை
மூஷாநபிதன்னைச் சுமந்தபலன்
முதலாய் மனுவோரிற் காணுமென்று
மூஷாநபிஜாதிக் குழுவினர்கள்
மரித்த கழுதையின் நகமெடுத்து
மூஷாபதவிக்காய் வருடந்தோறும்
முஹப்பத்தாய்த் துதிக்கின்றார் திருநாள்பாரீர் (173)

கடிய கோபத்தாற் கஃபாவிடித்துக், கல்லைத்தனி தனியாய்ப் பொறுக்கி
முடியு மட்டிலுர்ந்தனற் குண்டத்தில், மாவாய்ப் பொடியாகக் கரித்தெடுத்து
விடிய திருத்துவோ னெனினுமவன், விளங்கு மொலியுறும் புதினங்களில்
பிடியாய் சிந்தித்து சிறுக்கமைத்தால், பெரிய பாவியா முணர்ந்து பாரீர்

கரத்தாற் பைத்தோதக் கபுறிலான
  தாஹா நபிகரம் வாமுத்தினர்
சுரத்திற் கணையாழி உதையமாக
  ஹதியாச் செய்தனன் செயதக்காலி
சிரைத்தான் வேதியனுகக் கோனுகக்க
  செம்மல் தன்னையே அலக்கழித்தான்
கருத்தாலிதுகளி லெதுமேலென்று
  கனகப் பஞ்சாவிற் கணித்துப்பாரீர் (175)

கொண்டார் கொள்கையையகற்றிவிடக் கூறுவான் ஹறுமென்றவன்ஹறுமி
கொண்டார் வழமையும் பெருமைவாய்ந்த கூராம் பஞ்சாவினெழுக்கஞ்
[சொன்னேன்
கொண்டார் மனமொப்பாய் நீயாகாமல் குலத்தின செய்யிதாய்த்திரும்பி
[விட்டால்
கொண்டார் புகழ்வதின்று ஆவின் பேறு, கொள்ளாய் பவுசமல் கெடுக்கும்
பாராய்

வீசும்வாட் கூர்மை யிதற் கீடல்ல
  விஞ்சை மாந்திரந் தலை குனியும
காசு வலுவினற் பின் சாயாது
  கல்லா யெதிர்க் கினுங் கண்கூசாது
பாசு வாங்கியே வோடும் வங்கம்
  பந்தை யத்தாலு முந்திடாது
காசுதனை நம்பி மாறமைத்தால்
  கனகப் பஞ்சாவே கொல்லும் பாரீர் . (177)

சோங்காய்த்தரியாவில் யூனூசு நபியை, சுமையாய்த் தாங்கிய மீனதுவும்
தாங்குஞ் சாலீஹூ குழுவோர்க்காகத், தரணியீன்றதோர் ஒட்டகையும்
பாங்காயுஸைது நபிக்குகந்த பலனின் கோவேறு கழுதையதும்
வாங்கும் அசுஹாபு புகஹ்புடைய, வரிசைப்பேறுள்ள நாயதுவும்

சட்டம் பெருகிய சுலையுமானின்
  ருழ்மை யெறும்புடன் குதுகுதுவும்
பட்டமாகிய யிசுமாஹில் நபி
  பார்த்த நவமுள்ள ஆடதுவும்
துட்டர் மாண்டிட விளைந்த மூஷா
  துலங்க வேண்டிய மாடதுவும்
நட்டம் நீக்கிய முஹம்மதியா
  நயந்த கிலக்திப்பூச்கியு மொன்றுமே (179)

எறும்பு ஒட்டகை நாய் கழுதை யேரிலுழுதிடும் ரிஷபஞ் சிலந்தி
கரும்புச்சுவையுற மீனதுவுங்கானிலுறய பக்ஷி தனிக்குடமும்
விரும்பும் நபிகளிலுனூர்த்துகப்பால் விண்ணன்சுவனத்தை யடைவதானால்
அருமை நபியுல்லா பௌத்திரனை அழலாற்ற திப்பது ஹரமா?பாரீர் (180)

பஞ்க்ஷாவுகப்பானோர் புகழ்ந்துசெய்ய பதியிலஜாசிலின் குணமமைந்த
வஞ்சகமுள்ள பாசிக்குடன் வம்பாயுழறிடு முனைபிக்குவும்
நஞ்சாய் மதித்திடும் ஆலீமுவும் நலனையுணராத ஜாகில்களும்
பஞ்க்ஷாவெளியான புதினங்காணப் பாரிற் பிறந்தார்கள் ஆகம்பாரீர் (181)

மலடிமகவாக யிதைமதிப்பீர் மகிமைப்புதையலா யிதையுகப்பீர்
கலவிசெயவரும் இன்பம் யாவுங் கருதநிகரொவ்வாக் கனியாய்க்கொள்வீர்
பிலமாயாலீமின் பொய்மொழியாம் பிணியைச்சுகஞ்செயு மருந்தாயுண்பீர்
நலனிலுதித்ததோர் பிறவிகாண நல்லநபிகிளை மகிழச்சொன்னேன் (182)

கோட்டை கொத்தளங் குமுறும்படி கூராய்க்கவிபாடிச் செய்வாரேனும்
நாட்டைநகரினை நிமைப்பொழுதில் நகட்டித்தூக்கிட வலுவாரேனும்
ஊட்டமிகவுள்ள கவிவல்லவர் உவைஷினைப்பகைமோத நினைப்புறாமல்
தேட்டங் கண்டிடு மகிமைப்பஞ்க்ஷா தீனூல் விளங்கவே பணிவாராமீன் (183)

ஹக்கீகத்திலுள்ள பெரும்புதினம் அநவரதமும் விளங்குஞ்சபி
ஹக்கீக்கத்தின் வழி கண்டிடார்கள், அகமுங் குருடாக ஜாகிலாவான்
ஹக்கீக்கத்தினவ முஹப்பத்தாசை, அதனைக்கண்டிட உகப்பாகுவீர்
ஹக்கீகத்தால் வந்த மகிமைப் பஞ்க்ஷா, ஹவ்ஷதாய் நினையார்கள் வாழ்வா
[ராமீன் (184)

தடுத்தாரநேகமாய்வலுவிழந்தார், தாங்குமில்முகன் குபிரானது
தடுத்தாரதேயாண்டிற் படுத்துவிட்டார். தத்வஞ்கூறினேன் பவுசிழந்தான்
தடுத்தாரநேகமாய் விளங்கவில்லை, தாஹா நபிபேரர் சாபக்கூறால்
தடுத்தாரீமானை அஜாசில் கொண்டான். தாங்கும் பகைமாற்றி மீள்வா
[ராமீன் (185)

இசுலாங் கொடிகட்ட யிதுவே வழி. எதிரி வலுப்போக்க யிதுவுதவி
பிசுமினுயிர்காண யிதுவே முறை. பேரின்பங் கொள யிதுவே வழி
கசுரில் அசுவது கற்பலனின், கசுபு பொருந்திய கஷ்பாயிது
இசுமை புணராமற் சிறக்கமைத்து, ஈமானிழக்காமல் வாழ்வீராமீன் (186)

முற்றிற்று

சென்னை-600 008
149423

K. M. SAWMY & CO., (JUPITER PRESS,) MADRAS